Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 264

வெள்ளிக்கிழமை
16 ஓகஸ்ட் 2024

ஆடி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


முச்சந்தி முரளி



"இப்ப கோப்பிக்கடைத்தான் போகப்போக இறைச்சிக்கடையாகிடுமோ எண்டுதான் பயமாக்கிடக்கு"



## ஒற்றையாட்சியை பாதுகாக்கத் தயார்

### பெரமுனவின் வேட்பாளர் நாமல் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 16

ஒற்றையாட்சியைப் பாதுகாத்தவாறு நாட்டுக்குப் பொருத்தமான பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பொதுஜன பெரமுன தயாராகவே உள்ளது என்று அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளி 15

## கோப்பிக் கடைபோன்று தேர்தல் ஆணைக்குழு!

கொழும்பு, ஓக. 16

வேட்புமனு தாக்கல் செய்யும் நடவடிக்கைகளின்போது தேர்தல்கள் ஆணைக்குழு ஒழுக்கம், கட்டுப்பாட்டை பேணத் தவறிவிட்டதாக தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். 15

### ஜனாதிபதித் தேர்தல்

# 39 வேட்பாளர்களால் வேட்புமனு சமர்ப்பிப்பு

**கொழும்பு, ஓகஸ்ட் 16**

**செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்திய 40 வேட்பாளர்களில் 39 பேர் நேற்றுத் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். அவர்கள் 39 பேரும் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளனர்.** 15

## தபால் வாக்களிப்பு செப். 4 - 6 வரை

கொழும்பு, ஓக. 16

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதிவரை இடம்பெறுமென தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.. 15

## நாடாளுமன்று ஓக.21 கூடும்!

கொழும்பு, ஓக. 16

ஓகஸ்ட் மாத இரண்டாம் அமர்வை 21ஆம் திகதி புதன்கிழமை மாத்திரம் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கடந்த வாரம் கூடிய 15



## டம்மி வேட்பாளர்களைத் தடுக்க கட்டுப்பணத்தை உயர்த்துங்கள்!

### கம்மன்பில மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 16

ஜனாதிபதித் தேர்தலில், போலியான வேட்பாளர்களைத் தடுக்கவேண்டுமாயின் தேர்தல் கட்டுப்பணத்தை அதிகரிக்கவேண்டும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கட்டுப்பணம் குறைந்த அளவில் பேணப்படுவதால்தான் ஜனாதிபதித் தேர்தலில் போலியான வேட்பாளர் 15

## மயக்கமருந்து நிபுணரை இடம்மாற்ற நெருக்கடி

### பருத்தித்துறை மருத்துவமனையில் சத்திரசிகிச்சை முடங்கும் அபாயம்

யாழ்ப்பாணம், ஓக. 16

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடமையில் இருக்கும் ஒரேயொரு மயக்க மருந்து நிபுணரை இடமாற்றம் செய்யுமாறு வடமாகாண சுகாதார அமைச் 15

## சுயநிர்ணய உரிமை தமிழர்களுக்கு உண்டு!

### ஜனாதிபதி வேட்பாளர் ஜெயசூரிய தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 16

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு சுயநிர்ணயத்துக்கான உரிமையுள்ளது. இதை நாங்கள் உறுதியாக நம்புவதுடன், மீண்டும் 15

## துக்கப்படுவோரை வதைக்க இதுவொன்றும் கொழும்பல்ல

### இனப்படுகொலைத் தூபிக்கு கனேடிய மேயர் பற்றிக் ஆதரவு




ஒட்டாவா, ஓக. 16

துக்கப்படுபவர்களைக் கொடுமைப்படுத்துவதற்கு இதுவொன்றும் கொழும்பல்ல என்று கனேடிய சிங்கள மக்களிடம், பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளில் கொல்லப்பட்டவர்களுக்காக, பிரம்டன் நகரில் பொது நினைவுத்தூபி அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நினைவுத்தூபி அமைக்கப்படக்கூடாது என்று வலியுறுத்தி, ஸ்ரீலங்காவின் தேசியக் கொடிகளை ஏந்தியவாறு சிங்களக் கனேடியர்கள் நேற்றுமுன்தினம் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்போதே, துக்கப்படுப 15

### லட்சக்கணக்கான மக்கள் புடைசூழ

## மன்னார் மருத்திருவிழா நேற்றுப் பக்திபூர்வம்!



மன்னார், ஓக. 16

மன்னார் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மருதமடு அன்னையின் ஆவணிப் பெருவிழா இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்றுப் பக்திபூர்வமாக இடம்பெற்றது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதிகாரப் பகிர்வைக் கோரி பேரம்பேசுவதே சிறந்தது!

கூறுகிறார் இந்தியத் தூதுவர்



கொழும்பு, ஓக. 16

**இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது எனத் தீர் மானிப்பதற்கு முன்னர், அதிகாரப்பகிர்வை முழுமை யாக நடைமுறைப்படுத்துவதுடன் அதற்கு அப்பால் சகல வேட்பாளர்களுடனும் பேரம் பேசுவது சிறந்த அணுகுமுறை. இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும்.**

-இவ்வாறு இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

சந்திப்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான வேட்பாளர்களுடன் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து பேசிய விடயங்களை சுமந்திரன் தூதுவரிடம் எடுத்துரைத்தார். மூன்று பிரதான வேட்பாளர்களும் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவதாகக் கூறிய தாகவும் குறிப்பிட்டார்.

அதனைச் செவிமடுத்த தூதுவர் சந்தோஷ் ஜா, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது எனத் தீர்மானிப்பதற்கு முன்னர், அதிகாரப்பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் அதற்கு அப்பால் செல்வது குறித்து சகல வேட்பாளர்களுடனும் பேரம் பேசுவது சிறந்த அணுகுமுறை. இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதன் பின்னர் சிறந்த தீர்வுத்திட்ட முன்மொழிவை முன்வைப்பவரை ஆதரிப்பது குறித்துத் தீர்மானிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அத்துடன் தமிழ்மக்கள் சார்பில் களமிறக்கப்பட்டிருக்கும் பொது வேட்பாளர் குறித்து தூதுவர் சந்தோஷ் ஜா, தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பேரம்பேசுமாறு ஏனைய கட்சிகளுக்கும் தான் ஆலோசனை வழங்கியிருப்பதாகத் தெரிவித்தார். (ச-இ)

## தேர்தல் அச்சுப்பணிகள் இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஓக.16

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய அச்சுப் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்ததன் பின்னர் அச்சுப்பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதும், 2019 ஆம் ஆண்டு பயன்படுத்தப் பட்ட வாக்குச்சீட்டுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மக்கள் காங்கிரஸும் சஜித்துக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 16

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கும் என, அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பிலான, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு, வெள்ளவத்தை, கிரீன் பலஸ் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உயர் பீடம், அரசியல் அதிகாரபீடம் ஆகியன, கொழும்பில் கூடி, ஏகமனதாக தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சஜித்தை ஆதரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

## தாவினார் வேலுகுமார்

கொழும்பு, ஓக. 16

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவருமான வேலுகுமார், ரணில் விக்கிரமசிங்க பக்கம் நேற்றுத் தாவியுள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை வழங்குவதாக சில நாள்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் வேலுகுமார் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார். (ச-44)

## அதாவுல்லா கட்சி ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 16

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது.

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, நாட்டில் நிலவும் பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியது அவசியமாகும். அதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது செயற்படுத்தியுள்ள வேலைத்திட்டத்தின் மீது நம்பிக்கையுள்ளது என்றும் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார். (ச-இ)



## அரசியல் அனாதையான மைத்திரிபால

கொழும்பு, ஓக. 16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகச் செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது அரசியல் ரீதியில் அநாதையாக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

அவருடன் கூட்டணி வைப்பதற்கோ அல்லது அவரின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கோ பிரதான அரசியல் கட்சிகள் தயக்கம் காட்டிவருகின்றன.

விஜயதாஸ ராஜபக்சவுக்கு தலைமைப்பதவியை வழங்குவதற்காக சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை மைத்திரி துறந்தார். பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாஸ ராஜபக்சவை அவர் பெயரிட்டார். இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் விஜயதாஸ ராஜபக்ச போட்டியிடுகின்றார். எனினும், அவருக்கு ஆதரவளிக்கும் முடிவில் இருந்து மைத்திரிபால சிறிசேன விலகியுள்ளார்.

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்கு அவர் முன்வந்தபோதிலும் அவரின் ஆதரவைப் பெறவேண்டாம் என வலியுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பெற்றால் அது கத்தோலிக்க வாக்குகளை முற்றாக இல்லாமல் ஆக்கும் எனக் கூறப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. (ச-44)

## தேர்தலில் போட்டியிட ரணிலைத் தடுக்கவும்

*உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்*

கொழும்பு, ஓக. 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியற்றவர் என அறிவிக்குமாறு கோரி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஒருவரினால் இந்த அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் உயர்நீதிமன்றின் உத்தரவுகளுக்கு அமைய செயற்படவில்லை எனவும், அதனால் அவர் இலங்கை அரசியல் அமைப்பை மீறி உள்ளதாகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)




## பொதுஜன ஐக்கிய முன்னணி ரணில் ஆதரவுக்காக மலர்வு

கொழும்பு, ஓக. 16

ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் நோக்கில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய கூட்டமைப்பு ஒன்றிணைந்து 'பொதுஜன ஐக்கிய முன்னணி' என்ற கூட்டணியை அமைத்துள்ளன. இந்தப் புதிய கூட்டணியின் தலைவராக முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நியமிக்கப்பட்டுள்ளார். பொதுச் செயலாளராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவும், பொருளாளராக இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 21 உறுப்பினர்களைக் கொண்ட தலைமைத்துவ சபையையும் உள்ளடக்கிய கூட்டணிக்கான பதவிகளும் அறிவிக்கப்பட்டன. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் 11ஆம் நாள் திருவிழா வான கைலாசவாகன உற்சவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யும் 12 ஆம் நாள் திருவிழா நேற்றும் பெருமளவான அடியவர்களின் பங்கேற்புடன் இடம் பெற்றன. (ச-25,26, 66)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்


யாழ்ப்பாணம், ஓக. 16
ஆவரங்கால் கிழக்கு திருவருள்மிகு புதுவை அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தானத்தில் அமைக்கப்பட்ட புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணி வரை இடம்பெறவுள்ளது. (ச-100)

## பஜனை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.16
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் அனுசரணையில் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்ச வத்தை முன்னிட்டு நடைபெற்றுவரும் கூட்டுப்பிரார்த்தனையின் 8 ஆம் நாள் நிகழ்வாக பானுப்பிரியா தில்லைமணி பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளதாக திணைக் களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ச-25)

## வரலக்சுமி வழிபாடு

யாழ்ப்பாணம், ஓக. 16
வரலக்சுமி விரதத்தை முன்னிட்டு பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோயிலில் இன்று வெள்ளிக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.
இன்று மதியம் 2.30 மணிக்கு அபிசேகத்துடன் ஆரம் பமாகி பி.ப. 4 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம் பெற்று 4.30 மணிக்கு காப்புக் கட்டும் நிகழ்வு இடம் பெற உள்ளது. (ச-100)



## 2,85,000 ரூபாவுக்கு ஏலம் போன மாம்பழம்

வவுனியா, ஓக.16
வவுனியா, உக்குளாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 6 ஆம் நாள் மாம்பழத் திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.
இதன்போது விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று ஏலம் விடப்பட்ட நிலையில் உக்குளாங்கு ளம் பகுதியில் வசிக்கும் ச. சிந்துஜா என்பவர் 2 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவுக்கு பழத்தைப் பெற்றுள்ளார். (ச-25, 18)

## பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.16
தென்மராட்சிப் பிரதேச கலாசார அலகின் பண்பாட்டு விழா வரணி கலாசார மண்டபத் தில் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
நிகழ்வில் அனைத்துக் கலைஞர்களையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச கலாசார அலகினர் அறிவித்துள்ளனர். (ச-25, 9)

## 3 நூல்கள் அறிமுகம்



யாழ்ப்பாணம், ஓக.16
பத்மா இளங்கோவனின் 'சிறுவர் இலக்கிய நுட்பங் கள்', 'சிறுவர் தமிழ் அமு தம்', 'கொரோனாவின் தடங் களில்' ஆகிய 3 நூல்களின் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை மாலை 4 மணிக்கு யாழ்ப் பாணம் திருவடி நிழல், 18/2, அம்மன் வீதியிலுள்ள 'எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடை பெறவுள்ளது.
முனைவர் மனோன்மணி சண் முகதாஸ் தலைமையில் நடை பெறும் நிகழ்வில் வி.ரி. இளங் கோவன் வெளியீட்டுரையை ஆற்றவுள்ளார். (ச)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.16
மாவீரன் பண்டாரவன்னியனின் 121 ஆவது நினைவு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி நடை பெறவுள்ளது. விழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் ஒட்டுசுட்டான் பிரதேச செய லர் திருமதி யசோதா ஜெயராணி தலைமையில் கற்சிலைமடு கிராம அலுவலகப் பணிமனை யில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள தாக விழாக்குழு சார்பில் சி.வெதவனம் அறி வித்துள்ளார். (ச-25)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை தொடங்கவும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினை கள் ஏற்படக்கூடும். முடிவுஎடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**மிதுனம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த முக்கியமான காரியம் ஒன்று அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளை களின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாக மாகச் சமாளித்துவிடுவீர்கள். உறவுகளிடம் எதிர் பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்பு தருவார். நண்பர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம் :** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் பிடி வாதமாக நடந்துகொண்டாலும் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். ஆஞ்சநேயர் வழிபாடு சிறப்பு தரும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்ப டும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினை கள் ஏற்படக்கூடும். உடல்நலனில் கவனம் தேவை. காரியம் அனுகூலமாக முடியும். உறவு களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கும்பம்:** உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். குடும்பத்துடன் தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உற வினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஓரணியில் தமிழ்க்கட்சிகள் திரள்வது சாத்தியமா?

ஜனாதிபதித் தேர்தலுக்கான பந்தயம் உத்தியோக பூர்வமாக நேற்று ஆரம்பமாகியிருக்கின்றது. வேட்பு மனுத்தாக்கல் நேற்று நிறைவுற்றிருக்கின்றது. இனி ஒரு மாத காலத்துக்கு தேர்தல் களம் விடாமல் பற்றியெரியப் போவது சர்வநிச்சயம். இம்முறை பலமுனைகளிலும் களம் திறக்கப்பட்டிருப்பதால் போட்டியும் மிகப் பல மாக இருக்கப்போகின்றது. போரின் பின்னரான 15 ஆண்டுகளில் தமிழ் மக்கள் இம்முறை முதல் தடவையாக தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குகின்றனர். இதற்கு முந்தைய ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் வேட்பாளராக எம்.கே.சிவாஜிலிங்கம் போட்டியிட்டிருந்தபோதும் அது தமிழ் மக்களின் கூட்டிணைவாக இடம்பெற்றிருக்கவில்லை. அதனால் அவரால் சில ஆயிரங்களைத்தாண்டி வாக்குகளைப்பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் இம்முறை தென்னிலங்கையின் வாக்குகள் சிதறுண்டு போகவுள்ள நிலையில், தமிழர்களின் வாக்குகளை திரட்சியாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய சிங்கள வேட்பாளர் வெற்றியடையக்கூடிய வாய்ப்புண்டு. இதனால்தான் தமிழ்ப் பொதுவேட்பாளரால் பல தரப்புகளும் பதற்றமடைகின்றன.

தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கும் புளொட், ரெலோ கட்சிகளின் பிரதிநிதிகள் சில தினங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பின்போது தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கத்தால் தேவையற்ற இனமுறுகல் ஏற்படும் என சஜித் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த நாட்டில் தமிழர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதால் இனமுறுகல் ஏற்படும் என இன்னொரு சிங்கள ஜனாதிபதி வேட்பாளர் குறிப்பிடுகின்றார் என்றால் அவரது எண்ணம் எப்படிப்பட்டதாக இருக்கின்றது? தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடாதா? தமிழர்களால் இந்த நாட்டில் ஜனாதிபதியாகத்தான் முடியாது. ஆனால் தேர்தலில் போட்டியிட்டு தமிழ் மக்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தவும் கூடாதா? காலாதிகாலமாக ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்குகளை மாத்திரம் பெற்றுக் கொள்ளும் சிங்கள வேட்பாளர்கள், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில்லை. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் மைத்திரிபால சிறிசேன. இப்படியான ஏமாற்றங்களால்தான் தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டிருக்கின்றார்.

இதேவேளை தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் எதிர்க்கின்றார். தென்னிலங்கை சிங்கள வேட்பாளர்களுடன் பேச வேண்டும் என்கின்றார். அவர்கள் தங்கள் தேர்தல் அறிக்கையில் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் அதுவும் சமஷ்டி தொடர்பாகப் பேசினால் மாத்திரமே ஆதரவு என்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு பிரதான சிங்கள வேட்பாளரும் சமஷ்டி தொடர்பில் பேசாவிட்டால், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ன செய்யப்போகின்றது? தமிழ் மக்களின் பிரதான கட்சி என்று சொல்லிக்கொண்டு, இந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் முடிவெடுக்கட்டும் என்று அமைதியாக இருக்கப் போகின்றதா?தமிழ்ப் பொதுவேட்பாளர் காலத்தின் தேவை. தமிழ் மக்களை ஓரணியாக்கவேண்டிய சூழலில், தமிழ்ப் பொதுவேட்பாளர் ஊடாக அது சாத்தியமாகக் கூடிய நிலையில் அதை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஆதரிப்பதுதான் புத்திசாலித்தனம். கடந்த 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பிரிந்து வாக்களித்தமையால் சிங்களக் கட்சிகளால் இலகுவாக வெற்றிபெற முடிந்தது. ஆனால் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நோக்கி தமிழர்களை அணிதிரட்டுவதன் ஊடாக அதற்கு அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பக்கம் தமிழ் மக்களை ஓரணியில் வைத்திருக்க முடியும். சிங்களக் கட்சிகளை முழுமையாக வழித்து துடைக்க முடியும். இந்த இலக்குகளை கருத்திற் கொண்டாவது அனைத்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் ஓரணியாகத் திரள்வார்களா?




# தனிநபர் வருமான வரி விரைவில் நிவாரணம்!

*ஜனாதிபதி அறிவிப்பு*



**கொழும்பு, ஓக. 16**

**தனிநபர் வருமான வரிக்கு விரைவில் நிவாரணம் வழங்க எதிர்பார்ப்பதாகவும், அதற்காக சர்வதேச நாணயநிதியம் மற்றும் திறைசேரி ஆகியவற்றினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டு முன்மொழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் கடன்வழங்குநர்கள் 10 பில்லியன் டொலர் வரை கடன் நிவாரணம் வழங்க உடன்பாடு தெரிவித்துள்ளனர். சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் ஊடாக எமக்கு மூன்று ஆண்டுகளில் 2.9 பில்லியன் டொலர் கிடைக்கிறது. ஆனால் நாம் செய்துகொண்ட உடன்படிக்கைகளின்படியே நாம் நடக்க வேண்டும். இதற்காகத்தான் பொருளாதார பரிமாற்ற சட்டத்தைக் கொண்டு வந்தோம். இலங்கையை ஏற்றுமதி சார்ந்த மற்றும் போட்டிப் பொருளாதாரமாக மாற்றுவதே எமது இலக்காக இருக்க வேண்டும். வரி செலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் தனிநபர் வருமான வரிக் கட்டமைப்பை மாற்றியமைப்பது குறித்து தற்போது பரிசீலித்து வருகிறோம். நாம் தொடங்கிய செயல்முறையை தொடர்ந்தும் முன்னெடுத்து வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டும் - என்றார். (ச)

## மியான்மரில் சிக்கிய 20 இலங்கையர் மீட்பு

கொழும்பு, ஓக. 16

மியான்மரில் சைபர் கிரைம் வலயத்தில் சிக்கியிருந்த மேலும் 20 இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது தாய்லாந்தின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பாதுகாப்பில் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## இந்திய மீனவர்கள் 17 பேர் விடுவிப்பு

கொழும்பு, ஓக. 16

இலங்கைக் கடற்பரப்புக்குள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கைக்கான இந்தியத்தூதரகம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது. (ச)

## மனுஷவுக்கு பதிலாக பந்துலால்

கொழும்பு, ஓக. 16

உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து மனுஷ நாணயக்காரவின் வெற்றிடமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பந்துலால் பண்டாரிகொடவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. (ச)

## மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏற்பாடு

கொழும்பு ஓக.16

மாற்றுத்திறனாளிகள் தமக்கு வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்குப் பயன்படுத்தமுடியும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் வாகன அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஓய்வூதியம் பெறுபவரின் அடையாள அட்டை இவை எவையும் இல்லாதவைக்கு தங்கள் கிராம அலுவலருடன் தேர்தல் அலுவலகத்துக்குச் சென்று தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் தற்காலிக அடையாள அட்டையை மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்த முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை**

17.08.2024

சனிக்கிழமை - ஆவணி - 01

சுபநேரம் : 03.05 - 04.35

ராகுகாலம் : 09.05 - 10.35

**நாளொரு நல்வார்த்தை**

உங்களின் உயர்வின் அளவை நிர்ணயிப்பது உங்கள் கெட்டிக்காரத்தனம் அல்ல. உங்களுடைய மனப்பாங்கே.

-ஜிக் ஜிக்லர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தம் பற்றிப் பேச்சு மக்களுக்குச் செய்யும் துரோகம்



## கஜேந்திரன் எம்.பி. சீற்றம்

**வவுனியா, ஓக. 16**

**பொதுவேட்பாளரை நிறுத்தி விட்டு ரணிலிடம் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றி பேசிவிட்டு வந்திருப்பதானது மக்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**

வவுனியாவிலுள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொதுவேட்பாளர் என்பது என்னைப் பொறுத்தவரை திட்டமிட்ட நாடகம்.

பொதுவேட்பாளர்களை முன்னிறுத்திய சிவில் அமைப்புகளும், கட்சி சார்ந்தவர்களும் கடந்த 15 வருடங்களாக ஒற்றையாட்சிக்குள் 13ஆம் திருத்தச் சட்டத்தை திணிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு முழுமையாக உறுதுணையாகச் செயற்பட்டவர்கள்.

13ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பின்னால் செல்பவர்களை நிராகரித்து சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி என்ற நிலைப்பாட்டுடன் பயணிக்கின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பின்னால் மக்கள் திரண்டு விடாமல், மீண்டும் அம் மக்களை இடைநிலையில் வைத்துக் கொண்டு 13ஆம் திருத்தச் சட்டத்தை வலியுறுத்துகின்ற தரப்புகளுக்கு பின்னால் மக்களைத் திரட்டிக் கொடுக்கின்ற செயற்பாடுகளை செய்தவர்கள்தான் இவ் ஆய்வாளர்களும் சிவில் அமைப்புகள் என்று சொல்பவர்களின் பணியாக கடந்த காலத்தில் இருந்திருக்கின்றது.

பொதுவேட்பாளர் என்ற ஒருவரை நிறுத்திவிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருக்கின்றனர். குறிப்பாக செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார்த்தனுக்கு விசேட நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதனுக்கு யாழ். மாவட்டத்துக்குரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இந்தியாவின் நலனை பேணக்கூடிய நபர்களுக்கு வாக்குகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையிலும் தமிழர்கள் இந்த ஆட்சியாளர்களின் மீது அதிருப்தி அடைந்து, இவ் ஆட்சியாளர்களின் ஏமாற்றுவேலையைப்புரிந்துகொண்டு இத்தேர்தலைப் புறக்கணித்து இத்தேர்தலில் ஒதுங்கி இருக்கின்ற நிலைமைக்குச் சென்று விடக்கூடாது என்பதற்காகவும், தமிழர்கள் இத்தேர்தலை புறக்கணிப்பதிலிருந்து தவிர்த்து அவர்களை குழப்பி ஏதோ ஒரு விதத்தில் வாக்களிக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துக்காகவும், புறக்கணிப்பை தோற்கடிப்பதற்காகவும் தமிழர்களை மண்டியிடச் செய்வதற்காகவும், இவர்கள் போட்டிருக்கின்ற ஒரு நாடகம் தான் பொதுவேட்பாளர் என்பதாகும்- என்றார். (ஓ-110)

## சூரிய மின்கலத்திட்டம் சுதந்திரபுரத்தில் எதிர்ப்பு

முல்லைத்தீவு, ஓக. 16

சூரிய மின்கலத் திட்டத்துக்காக நில அளவைத் திணைக்களத்தினால் முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில் காணிகள் அளவீடு செய்யப்பட்டுள்ளமைக்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

சுதந்திரபுரத்தின் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வாகீசன் வீதிப் பகுதியில் 50 ஏக்கர் காணியில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் அளவீடு செய்யப்பட்டுள்ளன.

அளவீடு செய்யப்பட்ட காணிகளுள் ஆவணங்கள் உள்ள காணிகள், தென்னம்பிள்ளைக் காணிகள் உள்ளடங்குகின்றன.

காணியை அபகரிப்பதில் அரச அதிகாரிகள் துணைபோகின்றார்கள். எனவே குறித்த திட்டத்தை மக்களின் காணிகளில் மேற்கொள்வதை விடுத்து அரசுக்குச் சொந்தமான காணிகளில் நடைமுறைப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-25, 13)

வேலணை - பெருங்குளம்
முத்துமாரி அம்மன் திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம்
குரோதி வருடம் - 2024



“வேலணை யூராள் விளங்கு பெருங்குளத்தின் பால்”
அசைந்து நின்று அருள் பாலிக்கும் சீலத்தாள்
முத்துமாரி அம்மனாம் அந்த மூத்தம்மை தாள்
வணங்கின் சித்திக்கும் எல்லாம் சிறந்து”



தேர்த்திருவிழா - தீர்த்தத்திருவிழா

• 18.08.2024 - ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து முற்பகல் 9.30மணிக்கு திருத்தேரில் பவனிவருதற்கு அம்மன் எழுந்தருளல்

• 19.08.2024 - திங்கட்கிழமை முற்பகல் 09.30 மணிக்கு அம்பாளின் தீர்த்த உற்சவம்

அம்பிகை அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு தேரில் பவனிவரும் எம் குலதெய்வமாகிய முத்துமாரி அம்மனைத் தரிசிப்பதுடன் மறுநாள் நடைபெறும் தீர்த்தோற்சவத்திலும் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு:- மஹோற்சவ காலத்தில் அம்பிகை அடியார்களின் நலன் கருதி 776 - குறிகாட்டுவான், 780 - ஊர்கா வற்றுறை வழித்தடத்தில் ஈடுபடும் பிரயாணிகள் போக்குவரத்து பேருந்துகள் தங்களது அர்ப்பணிப்புடனான பொதுநலத்துடன் கூடிய சேவையை அம்மன் ஆலயம் வரை விஸ்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேலணை.

தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா உபயகாரர்கள்.

(CS/55931) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுத் தொன்மையான மந்திரிமனை புனரமைப்பு



## ஆளுநர் நடவடிக்கை!

**யாழ்ப்பாணம், ஓக. 16**

**யாழ்ப்பாண இராசதானி காலத்துக்குரியதாக கருதப்படும் மந்திரிமனையை புனரமைத்து பாதுகாப்பது தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.**

யாழ்ப்பாண இராசதானி காலத்துக்குரியதாக கருதப்படும் மந்திரிமனை, பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருள் சின்னமாக 2011 ஆம் ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. எனினும், மந்திரிமனை அமைந்துள்ள காணி மடம் அறக்கட்டளைக்குச் சொந்தமானதாகக் காணப்படுகிறது.

மந்திரிமனையைப் புனரமைப்பது தொடர்பில் பல சுற்றுப் பேச்சுகள் முன்பதாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் கலந்துரையாடலில் உரிய தீர்மானங்கள் எட்டப்படாமையால் காலதாமதம் ஏற்பட்டது.

இந்தநிலையில் வடக்கு ஆளுநர்தலைமையில் விசேட கலந்துரையாடலில் தொல்பொருள் திணைக்களத்தின் திட்ட முன்மொழிவுக்கு அமைய விதிமுறைகளுக்கு உட்பட்டு மந்திரி மனையை புனரமைத்து பாதுகாப்பதற்கு மடம் அறக்கட்டளைப் பொறுப்பாளர் இணக்கம் தெரிவித்துள்ளார். இந்த இணக்கப்பாட்டுக்கமைய தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான கோரிக்கைக் கடிதம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிராந்திய தொல்பொருள் திணைக்களத்தினூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலில் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியக அதிகாரிகள், யாழ் மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், மடம் அறக்கட்டளையின் பொறுப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ச-26.27)

# ரூ. 1700 உயர்வு பிற்போடுங்கள்

*தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு*

கொழும்பு, ஓக. 16

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான தீர்மானம் குறித்தவொரு வேட்பாளருக்கோ, கட்சிக்கோ அல்லது குழுவினருக்கோ சாதகமாக அமையக்கூடும். எனவே அந்தத் தீர்மானத்தை ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் நடைமுறைப்படுத்துங்கள் என்று ட்ரான்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா அமைப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளது.

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கான நாள்சம்பளமாக 1,700 ரூபாவை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித்தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வதானது குறித்த கட்சிக்கோ அல்லது குழுவினருக்கோ அல்லது தனியொரு வேட்பாளருக்கோ சாதகமாக அமையக்கூடும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)



# இந்திய சுதந்திரதினம் யாழில் கடைப்பிடிப்பு!

இந்தியாவின் 78 ஆவது சுதந்திரதின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போது யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டு இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியை துணைத் தூதுவர் வாசித்தார். நிகழ்வில் துணைத்தூதரக அதிகாரிகள், பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-26,20-25)

# வெறிநாய்க்கடி 11 பேர் இறப்பு

கொழும்பு, ஓக. 16

வெறிநாய்க்கடி காரணமாக இந்த ஆண்டின் இதுவரையான காலத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெறிநாய்க்கடி தொடர்பில் மக்களுக்குத் தெளிவின்மை காரணமாகவே இந்த மரணங்கள் நிகழ்ந்துள்ளன என அதன் சமூக சுகாதார நிபுணர் மருத்துவர் அதுல லியனபத்திரன தெரிவித்தார்.

வெறிநாய்கடிப்பதால் ரேபிஸ் என்ற வைரஸ் உருவாகும். இந்த வைரஸ் உடலில் நுழைந்து அதன் அறிகுறிகளைக் காட்ட மூன்று வாரங்கள் முதல் மூன்று மாதங்கள் வரை எடுக்கும்.

எனவே, நாய் கடிக்கும் பட்சத்தில் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். (ச-இ)

# ஜனாதிபதி ரணிலின்கீழ் 3 அமைச்சுப் பதவிகள்!

*வர்த்தமானி வெளியீடு*

கொழும்பு, ஓக. 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் மூன்று அமைச்சுப் பதவிகளைக் கொண்டு வந்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, சுற்றுலா மற்றும் காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் முன்னர் இந்த அமைச்சுப் பதவிகளை வகித்து வந்த நிலையில், அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் பறிக்கப்பட்டமையால் அமைச்சுப் பதவிகள் வெறிதாகின. இந்த அமைச்சுப் பதவிகளை தனது பொறுப்பின் கீழ் கொண்டுவந்து ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினம் தெரியுமோ?

எப்படியிருந்த கட்சி இப்பிடியாப் போட்டுதே என்டு வீட்டுக் கட்சியைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டியிருக்குது. என்னதான் வெளியில எங்களுக்குள்ள பிரச்சினை இல்லையெண்டு அவையள் சொன்னாலும், உள்ளுக்க கடும் பிரச்சினைதான் போய்க் கொண்டிருக்குது. பார்லிமெண்டில ஆளும் கட்சி, எதிர்க் கட்சி மாதிரித்தான் கட்சியின்ர மத்தியகுழுக் கூட்டத்துக்கு கன்னை பிரிஞ்சு எல்லாரும் வருகினம். தாங்களுக்கு சப்போர்ட்டான ஆக்களோடதான் பக்கத்தில இருப்பினம். அதிலையும் வீட்டை எப்பிடியும் உடைச்சே தீருறதெண்டு கங்கணம் கட்டிக் கொண்டு திரியிறவை பின்னுக்குப்போய்த்தான் ஒண்டா இருப்பினமாம். அப்பதானே ஏதும் கூடிப் பறைஞ்சு, எதிராளியளை மடக்கலாம்.

இந்தமுறை மத்தியகுழுக்கூட்டமும் பெரும் அடிபாடுகளுக்குள்ளதான் நடந்தது. முக்கியமா கட்சியின்ர மத்தியகுழு உறுப்பினரா இருந்து கொண்டே பொதுவேட்பாளரா குதிச்ச அரியத்தாரை கட்சியில இருந்து நிப்பாட்ட வேணும் எண்டது உந்தப் பின்வரிசைக் கும்பலின்ர கூச்சலாம். "கட்சிக்கே தெரியாமல் எப்பிடி அவர் பொதுவேட்பாளராக முடியும்? கட்சியின்ர கட்டுக்கோப்பு என்னவாகிறது? உவையாலதான் கட்சிக்கு கெட்ட பேர். உவரை நிப்பாட்டினாத்தான் மற்றவைக்கு ஒரு பாடமா இருக்கும்" எண்டு ஒரே கத்தல். ஆனால் எடுத்தம் கவிழ்த்தம் எண்டு ஆரையும் கட்சியை விட்டு நிப்பாட்ட ஏலாது எண்டது , சட்டதிட்டங்கள் தெரிஞ்ச அந்தக் கும்பலுக்கு விளங்கேலையோ, அல்லது விளங்காதமாதிரிக் கதைச்சினமோ தெரியாது. இல்லாட்டி இப்பிடி அரியத்தாரை நிப்பாட்டினால் அதுக்கு எதிரா அரியத்தால் வழக்குப் போட்டால் அதை வைச்சே இன்னும் நாலைஞ்சு வருசம் கட்சியை சீரழியவிடலாம் எண்டும் பிளான் போட்டிருக்கலாம் தானே.

இப்பிடி அவையள் அரியத்தாரை நிப்பாட்டுறதைப் பற்றிக் கதைக்கேக்க, மற்றத்தரப்பு எம்.பி. ஒராள் எழும்பி " எங்கட கட்சி போட்டியிடுற எலக்சனில எங்கட கட்சிக்கு எதிரா வேட்புமனுத்தாக்கல் செய்து 'வண்டில்' விட்ட சிலரைப் பற்றி கட்சிக்கு எழுத்தில அறிவிச்சம். ஆனால் ஒண்டரை வருசமாகியும் இதுவரை ஒரு மறுமொழியும் இல்லை. ஒரு நடவடிக்கையும் இல்லை. கட்சி உறுப்பினர் எண்டால் பெரிசு, சிறிசு எண்ட வித்தியாசம் இல்லை. எல்லாருக்கும் நடவடிக்கை எடுக்கோணும். முதல்ல அரியம் உட்பட எல்லாருக்கும் விளக்கம் கேட்டு கட்சி கடிதம் ஒண்டு அனுப்பட்டும்" எண்டு சொல்லியிருக்கிறார். அதுக்குப் பிறகுதான் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பிறதெண்டும், அதுவரைக்கும் அரியத்தார் கட்சிக் கூட்டம் ஒண்டுக்கும் கூப்பிடுறேலை எண்டும் முடிவெடுத்தவையாம்.

அந்த எம்.பி. சொன்ன விசயத்தில வாற 'வண்டில் விட்ட' ஆக்களுக்கு எதிரா ஏன் கட்சி இதுவரை நடவடிக்கை எடுக்கேலை எண்டு உங்களுக்கும் டவுட் வரும். அவையள் 'மந்திரம்' போட்டமாதிரி சுத்தி இருக்கிற இடம் பரமசிவன் கழுத்து. அதாலதான் அவைக்கு எதிரா முறைப்பாடு போய் வருசக்கணக்காகியும் கட்சி ஒரு கடுதாசி கூட அனுப்பேலை யாம். இப்பிடிப்பட்ட கட்சிதான் தமிழருக்கு நீதி வாங்கித் தரப்போகுதாம்.

-பட்சி

padsi@uthayan.com

அலங்காரக் கந்தனாக அருள்பாலிக்கும் நல்லூர்க்கந்தசுவாமி கோவில் வருடாந்தப் பெருவிழாவின் ஆறாம் நாள் மாலை உற்சவத்தை முன்னிட்டு ஆட்டுக் கடா வாகனத்தில் பக்தர்கள் புடைசூழ முருகப்பெருமான் வெளிவீதி உலா வந்தார். (ச-25, 100)







## ரணில் வேட்பு மனுத்தாக்கல் கிளிநொச்சியில் பொங்கல்

கிளிநொச்சி, ஓக.16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேட்பு மனுத்தாக்கல் செய்வதை முன்னிட்டு ஐக்கிய தேசியக்கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளர் எஸ்.விஜயராஜன் தலைமையில் பொங்கல் நிகழ்வு கிளிநொச்சி பேருந்து நிலையத்துக்கு முன்பாக நடைபெற்றது. நிகழ்வில் 'பியூபிள்கொப்' இன் தவிசாளர் சமந்த பண்டார உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ச-25-113)

# தமிழ்க் கட்சிகளின் சந்திப்பு மக்களுக்குப் புரியாதபுதிர்

ஜே.வி.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 16**

**13ஆவது திருத்தம் தருகின்றோம், சமஷ்டி தருகின்றோம், வட கிழக்கை இணைக்கின்றோம் என்று கூறிக் கூறியே கடந்த கால ஆட்சியாளர்கள் தமிழ்மக்களை ஏமாற்றியுள்ளனர். வஞ்சித்துள்ளனர்.**

இவ்வாறான நிலையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள தற்போதைய நிலையில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருப்பது தமிழ்மக்களுக்குப் புரியாத புதிராக உள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஜனாதிபதியாக ஒரு சிங்களவரே வரக் கூடிய நிலைமைகள் காணப்படும் நிலையில் ஜனாதிபதியாக வந்த பின்னர் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு ஏதுவாகச் சென்றோம், சரணடைந்தோம் என்பதாகவே தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இதற்காகப் பணப் பெட்டிகள் கைமாறப்பட்டனவா? அல்லது வேறு ஏதாவது சலுகைகள் வழங்கப்பட்டனவா? அல்லது சலுகைகள் வழங்குவதாகக் கூறப்பட்டனவா? யாருக்கும் தெரியாது.

இது தமிழ்மக்களுக்குப் புரியாத புதிராகவே உள்ளது. எனினும், தமிழ்மக்களைச் சதா காலமும் ஏமாற்றமுடியாது என்பதை இவ்வாறான தமிழ் அரசியல்வாதிகள் விளங்கிக் கொள்ளவேண்டும், என்றார். (ஒ-66)




## அருள் பொழியும் முருகா

நல்லை நாளில் அமர்ந்து அருள்
பொழியும் முருகா
உன் அழகுக்கு ஈடு உலகில் ஏதுமுண்டோ முருகா
பக்தர் மனங்களில் உறைந்திடும் முருகா
அவர் தம் வினைகள் போக்கிடும் முருகா
வெள்ளி மயில் ஏறிவரும் முருகா
வள்ளி தெய்வானையுடன் காட்சி தரும் முருகா
ஆறுமுகமாக வரும் தேவ சேனாதிபதியே முருகா
சூரனைச் சங்காரம் செய்த வீர முருகா
அள்ளி எமக்கருள் தந்திடும் நல்லூர் முருகா
உனை வேண்டி உன் பதி வந்தோம்
அருள் தா முருகா
சுற்றி வரும் பகை விரட்டி காத்திடு முருகா
பக்தர்கள் வினைபோக்க வேலுடன் வருவாய்
குமரா முருகா.

■ நாகலிங்கம் தங்கவேல்

## நல்லூர்த் திருவிழா 8 ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.16

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் கலாசார நிகழ்வுகளின் 8 ஆம் நாள் நிகழ்வுகள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, நீர்வேலி அருள்மிகு செல்வக்கதிர்காமர் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ. தியாக மயூரகிரிக்குருக்கள் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பிரதம அதிதியாக முன்னாள் மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரன், சிறப்பு அதிதியாக வேலணை உதவிப் பிரதேச செயலர் க.பார்த்தீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை, புத்தூர் கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ செல்வக் கதிர்காமர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விஷேட நிகழ்வாக இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் வாத்திய சங்கமம் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25)



## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஓக.16

மாவட்டச் செயலக திறன் அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் உள்ளூர் நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கான வியாபார பயிற்சி மற்றும் சமையல் திறன்களில் அறிவை மேம்படுத்துவது தொடர்பான பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வு யாழ். மாவட்ட பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் யாழ்.பஸ்ரியன் விடுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ள பயிற்சிப் பட்டறையில் பிரதேச செயலக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட 40 பயனாளிகள் பங்குபற்றுவர். (ச-25, 9)

நல்லூர்க் கந்தன் ஆலய மஹோற்சவ காலத்தில் மாணவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் வழிகாட்டலில் வெளிவீதி பஜனை நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. (ச-25, 100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14வது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 07 . 1940

மறைவு 16 . 08 . 2010

## அமரர் தர்மலிங்கம் தர்மராஜா

**(ஓய்வுபெற்ற உதவித் தொழில் ஆணையாளர் - வவுனியா)**

**திதி : 11.0 2024**

அப்பா !!! இருக்கும் போது கற்றுக்கொடுத்த னையும் விட நம்மை விட்டு
பிரிந்த பிறகு அதிகமாக கற்றுக்கொடுக்கும் வன் நீங்கள் - அப்பா!
அப்பா என்ற ஆலமர நிழலில் இருந்த வரை
வாழ்க்கை எனும் வெயில் நம்மை சுட்டதில்லை - அப்பா !
நீங்கள் தடுமாறி விழுந்த இடங்களில் தவறிக் கூட
நாங்கள் விழுந்து விடக் கூடாது என நினைப்பவர் அப்பா நீங்கள் - இறுதியில்
கலங்கி துடிக்க விட்டு சென்றதுதான் ஏனோ???
உங்கள் ஆத்மா சாந்திபெற நெட்டிலிப்பாய் பிள்ளையார்
பாதங்களை பற்றுகின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

அப்பிளானை, கோப்பாய் மத்தி, கோப்பாய். (CS/55932) J-1 **குடும்பத்தினர்.**

# மணலகழ்வில் ஈடுபட்ட டிப்பர்கள் மடக்கிப்பிடிப்பு!

## இருவர் கைது





யாழ்ப்பாணம், ஓக.16


யாழ்.தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற இரண்டு டிப்பர் வாகனங்கள் கொடிகாமம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கொடிகாமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் சிவலிங்கம் பிரபாகரன் தலைமையில் கொடிகாமம் பொலிஸ் நிலைய நிர்வாகப் பிரிவு பொறுப்பதிகாரியான தினேஷ் குணதிலக, குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரிகளான எஸ்.ஐ. டிலான் சேமசிங்க, வியஜரட்ன மற்றும் தேவதாஸ் ஆகியோரால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

(ச-27,20)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 02 . 10 . 1946

மறைவு 19 . 07 . 2024

கடந்த 19.07.2024 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் சோமசுந்தரம் புவனேந்திரன்

**(இந்திரன் - மாவை)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (16.08.2024) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்ட அயலவர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், ஆத்ம சாந்திக் கிரியையில் கலந்து கொண்டோருக்கும். கிரியை செய்த குருமார்களுக்கும், அஞ்சலிப் பதாகைகளை வைத்தவர்களுக்கும், பல்வேறு வகைகளில் உதவி புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயம் சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**29, செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.** (CS/55938) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 03 . 1956

மறைவு 15 . 08 . 2024

## வேலாயுதபிள்ளை குணபாலசிங்கம்

யாழ். அரியாலையை பிறப்பிடமாகவும் கொழும்பு, அளவெட்டி, அரியாலை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை குணபாலசிங்கம் அவர்கள் நேற்று (15.08.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை-மனோன்மணி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-பரமேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கருணாதேவியின் அன்புக் கணவரும் கோகுலன் நவசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபா, கீர்த்தனா ஆகியோரின் அன்பு மாமனாரும் அட்வின், ருத்விக், ரேக்ஷா, ஹரிஷ்நாத் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சத்தியமூர்த்தி மற்றும் சுந்தரமூர்த்தி காலஞ்சென்ற கலைச்செல்வி மற்றும் கலைவாணி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகந்தி, அமிர்தன், நிருசன், கோகிலவதனி, விதுரன், சாங்கீதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகுருநாதன் லிங்கநாதன், நகுலநாதன் சகுந்தலாதேவி, சுமனாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2024) வெள்ளிக்கிழமை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 12, சுப்பிரமணியம் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்** (CS 55941) V-1

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 076 6529**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நீங்கா நினைவலைகள்

மண்ணில் 13 • 04 • 1936



விண்ணில் 30 • 07 • 2023

### அமரர் தியாகராஜா திருவாலாம்பிகை (ஜோதி)

**திதி : ஆடிமாத வளர்பிறை துவாதசி (16.08.2024)**

குடும்பத்தின் குலவிளக்காயிருந்து
மெழுகு வர்த்தியாய் உருகி
வாழ்வு சிறக்க வைத்த தெய்வமே
நீங்கள் நடந்து திரிந்த காலடி
சுவடுகள் எல்லாம் மறைந்து விட்டன
ஓராண்டு ஓடினாலும் உங்கள்
நினைவுகள் மறையாது அன்பை
தேடி ஏங்கித் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
திருப்பாதங்களில் கண்ணீர்
பூக்களை காணிக்கையாக சொரிகின்றோம் அம்மா.

**இல 54 கொழும்புத்துறை வீதி,**
**பாண்டியன்தாழ்வு.**

**மக்கள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS/55933) J-1

# மன்.மாவட்டச் செயலர் பிறந்ததின நிகழ்வுகள்

மன்னார், ஓக. 16

மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனின் 50 ஆவது பிறந்ததின நிகழ்வு மாவட்டச் செயலக நலம்புரி சங்கத் தலைவர் செல்வகுமார் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

இதன்போது மாவட்டச் செயலக வளாகத்தில் மோட்டார் வாகன தரிப்பிடத்துக்கான அடிக்கல் நடுகை செய்துவைக்கப்பட்டதோடு, மரக்கன்றுகளும் நடப்பட்டன.

அத்துடன் விவசாயிகளுக்கு காப்புறுதிச் சான்றிதழும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டன.



நிகழ்வில் மாவட்டச்செயலக சிரேஷ்ட பதவி நிலை மற்றும் மாவட்டச் செயலக அனைத்து உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

(ச–25, 56,60)

# யானைகள் அட்டகாசம்; கட்டுப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக.16

முல்லைத்தீவு, தென்னியங்குளத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது இந்தக் கிராமத்தில் 500 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தென்னியங்குளம் அணைக்கட்டு வழியாகவும் கோட்டைகட்டியகுளம் வழியாகவும் வருகை தரும் யானைகள் பயிர் அழிவுகளை ஏற்படுத்திச் செல்கின்றன. எனவே வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ச-25, 13)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, உப அலுவலகம், உரும்பிராய்.
## ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலத்திற்குட்பட்ட வட்டாரம் 03, கரந்தன் நீர்வேலி வீதி, ஆதன இலக்கம் 108/12 இன் சொந்தக்காரர் உரிமை கோருபவர் J.செபமலர் எனும் பெயரில் அமைந்துள்ள ஆதனத்தினை யேசுதாசன் கொன்சைன்ரைன் எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனமானது வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராய் இறை வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, கிராம அலுவலர் பிரிவு J/266 இல், "கோடாலியன் கலட்டி" நிலப்பரப்பு 61 குளி 5.4 இது நில அளவையாளர் திரு.ஏ.கமலசேகரத்தால் 15.08.2010 இல் அளந்து வரையப்பட்ட நிலஅளவைப்படம் 4234 "எ" யில் 19 துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது இவற்றில் துண்டு 18 என காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு 03 குளி 14.85 அதே நிலஅளவையாளரால் 22.08.2010 இல் அளந்து வரையப்பட்ட நில அளவைப் படம் இலக்கம் 4255 இல் துண்டு 1 என காட்டப்பட்டுள்ளது இதற்கு எல்லைகளாக கிழக்கு செல்லத்துரை பெண் லிங்காவதியின் ஆதனம் வடக்கு செல்லத்துரை பெண் லிங்காவதியின் ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு சைமன் றைஸ்க்கினுக்கும் மறுபேருக்குரிய ஆதனம் என ஆதன அட்டவணை குறிப்பிட்டும், இவ்வாதனத்திற்கு பிரசித்த நொத்தாரிசு ஏகாம்பரம் நடேசன் முகதாவில் 2014.06.15 ஆம் திகதி 1640 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் யேசுதாசன் கொன்சைன்ரைனுக்கு அவரது சகோதரனான யேசுதாசன் கிறேசியன் சாட் மூலம் வந்தடைந்துள்ளது.

யேசுதாசன் - கிறேசியன் சாட்டுக்கு செல்லத்துரை கைம்பெண் லிங்கவதி அல்லது சுந்தரலிங்கம் மகள் லிங்கவதி தனது அதிகாரத் தத்துவகாரர் முருகனூர் வவுனியா அரியநாயகம் றசில் கொன்ஸ்ரன் மூலம் பிரசித்த நொத்தாரிசு முதலித்தம்பி சேதுகாவலர் இராசையா என்பவரினால் 3788 ஆம் இலக்க 2010.10.04 ஆம் திகதியில் நன்கொடை உறுதியாக எழுதப்பட்டுள்ளது இதற்கு முற்பட்ட தாயுறுதிகள் எதுவும் இவ் உறுதியில் காட்டப்படவில்லை. இவ் உறுதியானது மரபு வழியாக தனது பிதா காலம்சென்ற C.சுந்தரலிங்கம் அவர்களை அடைந்து அவருக்குடையதாக இருந்தது என்றும் அவர் அதனை பாரம் பராதீனம் எதுவும் பண்ணாது இறந்து போக தனக்கு பிதாவழி முதுசமாக வந்து அடைந்ததென்றும் இதனை தான் கடந்த 25 வருடங்களுக்கு மேல் இடையறாமலும் இடையூறெதுவுமின்றியும் ஆட்சி புரிந்து வந்துள்ளேன் என்றும் இதன் ஆதார உறுதியெதுவும் கைவசமில்லை என்றும் வெளிப்படுத்துகிறேன் என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு வெளிப்படுத்தல் உறுதியாக காணப்படுகின்றது. இறுதியில் பரப்பளவு 3 பரப்பு 14.85 குளி என காட்டப்பட்டுள்ளது.

எனவே இவ்வாதனத்தினை யேசுதாசன் கொன்சைன்ரைன் என்ற பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் தகுந்த சட்டரீதியான ஆவணங்களுடன் 2024.08.30ஆம் திகதிக்கு முன்னர் (14 நாட்களுக்குள்) எழுத்து மூலம் சபைக்கு அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யேசுதாசன் கொன்சைன்ரைன் என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் விநயமுடன் அறியத்தருகின்றேன்.

**2024.08.16**
**திகதி**

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

(CS/55940) J-1





# ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.16

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டுச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பு ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன பத்தாம் திருவிழாவான கடந்த செவ்வாய்க்கிழமை பேராதனைப் பல்கலைக்கழக மொழியியல் துறையின் விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி கலந்து கொண்டு 'விளைந்த அன்பில் உமிழ்வார்' எனும் தலைப்பில் ஆன்மீக உரை ஆற்றினார்.


(ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.வெங்காயம் விலை சரிவு!

யாழ்ப்பாணம், ஓக. 16
சந்தைகளுக்கு போதியளவு சின்ன வெங்காயம் வந்து சேர்வதால் அதன் விலை திடீரெனச் சரிந்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.
வலிகாமம், கிழக்கு, மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி தீவுப்பகுதிகளில் காலபோகத்துக்கான சின்ன வெங்காயச் செய்கையில் விவசாயிகள் பரவலாக ஈடுபட்டனர். இந்தச் செய்கைக்காக அறுவடை செய்யும் பணிகள் தற்போது துரிதமாக இடம்பெற்று வருகின்றன. அதனால் சந்தைகளுக்கு போதியளவு வந்து சேர்வதால் அவற்றின் விலை திடீரெனச் சரிந்துள்ளது.
சின்ன வெங்காயம் கிலோ 200 ரூபாவாக விற்கப் படுவதோடு வெங்காயப்பூ கிலோ 150 ரூபாவாக சரிந்தும் காணப்படுகின்றது. (ச-17)

# வீதியோர மரக்கன்றுகள் விஷமிகளால் எரிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 16
சாவகச்சேரி, சங்கத்தானை ஏ -9 வீதியோரத்தில் நடப்பட்டிருந்த மரக்கன்றுகள் இனந்தெரியாதோரால் இரவு வேளையில் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன.
சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் கீழ் வசிக்கும் பொதுமக்களால் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு, தற்போது நிழல்தரு மரங்களாக மாறியுள்ள நிலையில் அவை எரிக்கப்பட்டுள்ளன என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-25, 9)

# இரு மாணவர்களுக்கு வெண்கலப் பதக்கம்!



முல்லைத்தீவு, ஓக. 16
2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட தேசிய மட்ட மல்யுத்தப் போட்டி கடந்த 9ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை தொடர்ந்து 3 நாள்கள் கண்டி திகன உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.
இப்போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மாணவர்களான ஏ. ரஜிந்தன், எ.விபுர்ஜன் ஆகிய இருவரும் மூன்றாம் இடங்களைப் பெற்று வெண்கலப் பதக்கங்களைப் பெற்றனர். (ச-22.13)



பளை இயக்கச்சி மகா வித்தியாலய மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டல் மற்றும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வுகள் வித்தியாலய மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன. (ச-25, 9)

# யாழ். மாவட்டச் செயலகத்தில் போட்டோப் பிரதி இயந்திரம் பழுது

## சிரமத்தில் மக்கள்

யாழ். மாவட்டச் செயலக பதிவாளர் திணைக்களத்திலுள்ள போட்டோப் பிரதி இயந்திரம் பழுதடைந்துள்ளமையால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
பதிவாளர் திணைக்களத்தில் உள்ள போட்டோப் பிரதி இயந்திரம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பழுதடைந்த நிலையில் திருத்தப்படாமலுள்ளது. இதனால் காணிகளுக்கான தோம்பு மற்றும் உறுதிகளின் பிரதிகளை பெறமுடியாத நிலை காணப்படுகிறது.
எனவே உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-25, 20)


# பெறுகை அறிவித்தல்

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

# சபை நிதி மற்றும் PSDG நிதி- 2024

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபை சபை நிதி மற்றும் PSDG நிதிகளைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தேசிய போட்டிக்கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆந் திகதிய04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019, ஆந் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமானதரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V** இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்குபிரதேச சபை **(தொலைபேசி : 021225014 , தொலைநகல் : 0212250144 , மின்னஞ்சல் : valiwestps@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் **இடத்தில் 20.08.2024ம் திகதியிலிருந்து 03.09.2024 ம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 15.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000.00 (வரிநீங்கலாக)** இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 04.09.2024 ம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அலலது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்விசெல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | **Construction of Shopping Complex Stage 11 at Sangaraththai Market** NP/14/41(17)/02/CF/SM-11/2024 | -14.219 Mn. | 90 நாட்கள் | C6&C05 Buildings | 77 நாட்கள் | 20.11. 2024 | Rs. 142,000 .00 | 18.12.2024 |
| 02 | Renovation of Periyathampiran Road, Chulipuram NP/14/41(17)/02/PSDG/08 /Periyathambiran Rd/2024 | 4.237 Mn. | 90 நாட்கள் | C8&C7 Highway | 63 நாட்கள் | 06.11. 2024 | Rs. 43,000. 00 | 04.12.2024 |

கேள்விதிறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்குபிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 28.08.2024 அன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்.
பெறுகைக் குழு.
வலிகாமம் மேற்குபிரதேச சபை.
சுழிபுரம்.
16.08.2024

(CR/42931) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெப்பத்தால் 47,000 பேர் உயிரிழப்பு

2023ஆம் ஆண்டு அதிக வெப்பம் காரணமாக ஐரோப்பாவில் 47 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக பார்சலோனா சுகாதார ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெப்பம் காரணமாக இறந்தவர்களில் முதியவர்களே அதிகம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

35 ஐரோப்பிய நாடுகளில் 47 ஆயிரத்து 960 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-6)



## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 06 . 1966



மறைவு 15 . 08 . 2024

### கயல்விழி சந்திரகுமார்

(ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர்-சுகாதார திணைக்களம்-யாழ்ப்பாணம்)

நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கயல்விழி சந்திரகுமார் அவர்கள் நேற்று (15.08.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்தியகலாநிதி சபாரத்தினம்-கண்ணகை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் அமரர்களான இராமலிங்கம்-இராசாம்பாள் தம்பதியினரின் அன்பு மருமகளும் சந்திரகுமார் (ஓய்வுநிலை கிராம அலுவலர்) அவர்களின் பாசமிகு மனைவியும் மேனன் (HNB-வவுனியா), நிலானி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜேந்திரன் எழிலரசி-அன்னரன் யோகநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் லக்சனா-மேனன் (HNB-சாவகச்சேரி). அவர்களின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (16.08.2024) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் இல 687. பருத்தித்துறை வீதி. நல்லாரில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

இல. 687
பருத்தித்துறை வீதி,
நல்லூர்

இ.சந்திரகுமார்-கணவர்
(ஓய்வு நிலை கிராம அலுவலர்)
077 489 7320

(CS 1139) V-1

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 . 12 . 1949



மறைவு 16 . 08 . 2020

அமரர்

### திருமதி அன்னலட்சுமி செல்வநாயகம்

உங்களின் அழகான நினைவுகளுடனே..
விடிகிறது எங்களின் காலைகள் !

உங்களின் அன்பு நிறைந்த பாதையிலேயே..
நகர்கிறது எங்களின் நாட்கள் !

உங்களின் இனிமையான கனவுகளுடனேயே..
நிறைகிறது எங்களின் இரவுகள் !

எனில் பிரிவொன்றும் இல்லை..

துரைவீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 04 . 1935



இறப்பு 13 . 08 . 2024

### எட்வேட் நீக்கிலஸ்

(ஓய்வுநிலை கூட்டுறவு முகாமையாளர்-பாவற்குளம் & செட்டிகுளம்)

மிருசுவிலை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட் நீக்கிலஸ் கடந்த (13.08.2024) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஹூர்துமணியின் அன்புக் கணவரும், அலெக்ஸ், அமுதா, அலோசியஸ் (மணி) ஆகியோரின் அன்பு தந்தையும், ஜானகி, ராஜன் ஷாமலி ஆகியோரின் மாமனாரும், Mervin, Myrna, Beulah, Biyanka Joshua Joyce ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி மிருசுவில் St. Nicholas தேவாலயத்தில், இன்று (16.08.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3:00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, நல்லடக்கம் மிருசுவில் சேமக்காலையில் நடைபெறும். இதனை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குடும்பத்தினர்.

அலெக்ஸ் - +44 7929419316
அமுதா - +94 771829436
அலோசியஸ் - +44 7717973163

(CS/55937) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 08 . 1941



மறைவு 12 . 08 . 2024

### நடேசபிள்ளை பரமேஸ்வரி

யாழ்ப்பாணம் நீராவியடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடேசப்பிள்ளை பரமேஸ்வரி கடந்த 12.08.2024 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், நடேசபிள்ளையின் அன்பு மனைவியும், தெய்வேந்திரம் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, மகேஸ்வரி, திருச்செல்வம், மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராணி, ரவீந்திரன் (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்), ஜெயந்தி, வசந்தி (ஆசிரியை), கமலக்கண்ணன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணநிதி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), ரவிச்சந்திரமூர்த்தி, சத்தியபாலன் (ஓய்வு பெற்ற அதிபர்), கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் கோகிலன், சாருகன், மதுராந்தன், சஞ்யயன், கீர்த்தனன், சகானா, சார்மி, சிந்துஜா (வைத்தியர்), துவாரகன், பிரத்யுன்மன், மகிஷாயினி, சங்கவி, ரிஷிகேசன், அருள், டினேசா, அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இமயா, தீரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

321/1, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5869, 077 634 4987

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 55942) V-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் வரலாற்றில் கலைஞர்கள் காத்திரமானவர்கள்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக. 16**

**இழந்துபோன தமது இறைமையை நிலைநாட்டி, இலங்கைத் தீவில் தமது இருப்பை மீள நிலைநிறுத்தப் போராடும் ஈழத்தமிழினத்தின் வரலாற்றில், கலைஞர்களின் பணிகள் மிகக் காத்திரமான இடத்தைப் பெறுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

'பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது', 'போரம்மா உன்னையன்றி யாரம்மா' உள்ளிட்ட எழுச்சிப் பாடல்களினது குரலாகவும், யாழ்ப்பாணத்தின் பெருமளவு ஆலயங்களின் சிறப்பைப் பாடிய பக்தியின் குரலாகவும் தாயக இசைத்துறை வரலாற்றில் தனியிடம் பெற்றிருந்த, கரவைக்குமரன், மாமனிதர் செல்லத்துரை குமாரசாமியின் முதலாம் ஆண்டு நினைவேந்தலும் திருவுருவச் சிலை திறப்பும் அண்மையில் யாழ். உடுப்பிட்டியில் நடைபெற்றிருந்தது.

அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அன்னாரது திருவுருவச்சி லையை திரைநீக்கம் செய்ததுடன், 'குமாரசாமி இசைத்தமிழ்க் கழகம்' என்னும் இசைக் கல்லூரியையும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு சமூகத்தின் அக உணர்வுகளை, அகப்புறச் சூழலின் தாக்கங்களை, யதார்த்தப் புறநிலைகளை, காலப்பிரவாகத்தை, வரலாற்றை, கடந்துவந்த பாதைகளை, அச்சமூகத்தின் உண்மை உணர்வுகளைப் பதிவு செய்வதிலும், அடுத்த தலைமுறைக்கு அவற்றின் அடிமுறை பிறழாது கடத்துவதிலும் கலை எனும் ஊடகமே முன்னணி வகிக்கிறது. அந்த அடிப்படையில், எமது மக்களின் தேசவிடுதலைக் கனவைச் சுமந்து நிகழ்ந்தேறிய போரின் தாற்பரியத்தை, அதன்பாலிருந்த நியாயத்தை, அடக்குமுறையாளர்களால் எமது மக்கள் எதிர்கொண்ட அவலங்களை வெளிக்கொணரும் பணிக்கு கால்கோலாக இருந்த 'தமிழீழ எழுச்சிப் பாடல்களின்' மறக்கவியலாத குரலாக மாமனிதர் குமாரசாமி ஐயாவின் குரல் ஈழத்தமிழர்களின் மனங்கள் எங்கும் நிறைந்தே இருக்கும் என்றார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கலைஞர்கள், இசை ஆர்வலர்கள், அன்னாரது குடும்பத்தினர், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-113)

## அயோத்தியில் அபேஷ்

புதுடில்லி, ஓக. 16

இந்தியாவில், பிரமாண்டமாக அமைக்கப்பட்டு அண்மையில் கோலாகலமான வகையில் திறக்கப்பட்ட அயோத்தி இராமர் கோயிலின் வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மின்குமிழ்கள் திருடப்பட்டுள்ளன. (ம)


## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### சபை நிதி - 2024 (கட்டம் VII)

01 வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்புட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர். உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்.** வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர். பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர் (தொலைபேசி இல: -021-205 8867 )** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 3:00 மணிவரை 2024.08.16 ஆம் திகதியில் இருந்து 2024.09.02 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர். பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்.** அவர்களிடமிருந்து 2024.08.16 ஆம் திகதியிலிருந்து 2024.09.02 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணிக்கு இடையில்

மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு . வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. பருத்தித்துறை வீதி புத்தூர். யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு 2024.09.03 ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரா் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி. கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம். கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.08.23 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆஉவமுள்ள கேள்விதாரஉகள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/4/Council/ PVII/2024/30 | மடத்தடி - விவசாய வீதி இணைப்பு வீதி புனரமைப்பு , சிறுப்பிட்டி | 10.81 | 90 நாட்கள் | C6& C5 ( வீதி நிர்மானம் ) | 77 நாட்கள் | 110,000.00 | 17.12.2024 |
| NP/14/41(13)/4/Council/ PVII /2024/31 | ஆறுமுகசாமி வீதி புனரமைப்பு – நீர்வேலி தெற்கு | 6.33 | 90 நாட்கள் | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 77 நாட்கள் | 64,000.00 | 17.12.2024 |
| NP/14/41(13)/4/Council/ PVII/2024/32 | தலைமை அலுவலகத்திற்கான தரை வடிவமைப்பு மிகுதி வேலை – புத்தூர் | 3.23 | 60 நாட்கள் | C8 & C7 (கட்டட நிர்மாணம்) | 63 நாட்கள் | 33,000.00 | 03.12.2024 |
| NP/14/41(13)/4/Council/ DR/ PVII /2024/33 | கோப்பாய் மத்தி 119/17 உப ஒழுங்கை திருத்தம் | 2.11 | 60 நாட்கள் | C8 & C7 ( வீதி நிர்மானம் ) | 63 நாட்கள் | 22,000.00 | 03.12.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு.**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்.**

(CR/42932) J-1

2024.08.16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரயில் நிலையங்களில் சூரிய மின்கலங்கள்!

கொழும்பு, ஓக 16

இலங்கை ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமான ரயில் நிலையங்கள் மற்றும் கட்டடங்களின் கூரைகளில் சூரிய மின்கலங்களைப் பொருத்தி சூரியசக்தி மூலம் மின்னுற்பத் தியை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச, தனியார் பங்குடமை முறையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

300 க்கும் அதிகமான புகையிரத நிலையங்களில் சூரியசக்தி மூலம் மின்னுற்பத் தியை ஆரம்பிப்பது மிகவும் பொருத்தமானதென அடையாளங்காணப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)


## மரண அறிவித்தல்



தோற்றம் 11.11.1961 — மறைவு 15.08.2024

**திருமதி சுபத்திராதேவி பரமேஸ்வரநாதன்**

திருமதி சுபத்திராதேவி பரமேஸ்வரநாதன் அவர்கள் நேற்று (15.08.2024) வெள்ளிக்கிழமை சிவபாதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி-இராசமலர் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சட்டநாதன்-பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் பரமேஸ்வரநாதன் (முன்னாள் யாழ் மாநகரசபை பிரதம முகாமைத்துவ சேவைகள் உத்தியோகஸ்தர்) அவர்கள் பாசமிகு மனைவியும் Dr.சிவப்பிரியா (சித்த ஆயுள்வேத வைத்தியர் வேலணை பிரதேசசபை உப அலுவலகம் நயினாதீவு) அவர்களின் அருமைத்தாயாரும், கஜரூபன் (ஹற்றன் நஷனல் வங்கி-HNB. PLC மூதூர்) அவர்களின் அன்பு மாமியாரும் குகதாசன் (ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்) லெஜினா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் சம்மந்தியும் ஆவார். பாலச்சந்திரன், தர்மபாலன், பாலகிறிஸ்னன், பாலராஜன், சத்தியபாமா, சத்தியபவானி, வளர்மதி காலஞ்சென்ற அருந்ததி ஜெயபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சிதம்பரநாதர், செந்தில்நாதன், தனேஸ்வரி, காலஞ்சென்ற அமரர் யோகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, அமரர் அனந்தேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். யரூன் இன் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (16.08.2024) வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சிந்துப்பார்த்தி இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CR 1148) V-1



**ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்**
**வருடாந்த மகோற்சவம் - 2024**
**தற்காலிககடை இடஒதுக்கீடு**

ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 02.09.2024 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. ஆலயத்தின் மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடைகள் தொகுதி வாரியாக பின்வரும் வகையில் அமையும்.

1. ஐஸ்கிறீம் கடை
2. இனிப்பு வகை
3. தேநீர்க் கடை
4. மணிக்கடை
5. கச்சான் கடை

**முக்கிய குறிப்பு :**

முதல் மூன்று வகை கடைத்தொகுதிகளுக்கான இடம் பகிரங்க ஏலத்தில் கூடிய கூறுவிலைக்கு வழங்கப்படும். ஏனைய தொகுதிகளுக்கான வாடகை அடிக்கணக்கில் அறவிடப்படும்.

அக்கறையுடைய வர்த்தகர்கள் முன்கூட்டியே இட ஒதுக்கத்தை பெற்று தொடர்பான வாடகைப் பணத்தை முழுமையாக செலுத்தி உங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும். விபரங்கள் வழங்கவேண்டிய படிவங்களை கோவிலிலுள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏலம் கோரும் நாள் 21.08.2024 ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி.

தொலைபேசி இலக்கம் : 021 226 3074
021 205 6644

துன்னாலை வடக்கு,
புலோலி.

பெறுநர்
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

(CR42917) I-1



## மரண அறிவித்தல்



தோற்றம் 27.09.1975 — மறைவு 15.08.2024

**திருமதி சிவானந்தன் கலைவாணி**

(ஆசிரியை-பலாலி வடக்கு அ.த.க. பாடசாலை)

வீரபத்திரர் கோவிலடி, மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தன் கலைவாணி அவர்கள் நேற்று (15.08.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா (மணியம்)-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம்-திருப்பதி தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவானந்தன் அவர்களின் பாசமிகு மனைவியும் கோபிகன் (2023 A/L), கோபிகா (O/L), சாருகன் (தரம்-09), (மாணவர்கள், யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலாவதி (ஜேர்மனி), உமா (ஆசிரியை, முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் கமலநாதன் (ஜேர்மனி), உதயகுமார் (தண்ணீரூற்று இந்து கலவன் பாடசாலை), சிவசோதி காலஞ்சென்ற ஏகாம்பரம் மற்றும் ஜெகசோதி இராஜரட்ணம், தவமலர் மதிமுருகன் ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2024) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி-மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பங்களா லேன்,
வீரபத்திரர் கோவிலடி,
மல்லாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 293 6540
கணவர்: 077 293 6545

(CS 1143) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துக்கப்படுவோரை...

வர்களைக் கொடுமைப்படுத்துவதற்கு இதுவொன்றும் கொழும்பல்ல. கனடா அத்தகைய நடவடிக்கைகளை ஒருபோதும் ஆதரிக்காது என்று பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

"கனடாவிலும் அதன் மாகாணங்களிலும், நகரங்களிலும் வெளிநாடுகள் தலையிடுவதை நாங்கள் வரவேற்பதில்லை. இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளை நீங்கள் மறுத்தால் தாராளமாக கொழும்புக்குச் செல்லலாம். தங்கள் அன்புக்குரியவர்களுக்காகத் துக்கப்படுபவர்களைக் கொடுமைப்படுத்த இலங்கையில் உரிமைகள் வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால், இது இலங்கையோ கொழும்போ அல்ல. இது கனடா" என்று பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்த நினைவுத்தூபி அமைக்கப்படக்கூடாது என்றும், அது இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்றது எனவும் இலங்கை அரசாங்கம் தூதரக ரீதியிலான நெருக்கடிகளைக் கொடுத்திருந்தது. அவற்றையும் பிரம்டன் நகர மேயர் காட்டமாகக் கண்டித்ததுடன், நினைவுத் தூபி அமைக்கும் முயற்சியில் தீவிரம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தபால்...

இந்தக் காலப்பகுதியில் வாக்களிக்க முடியாதவர்கள் செப்ரெம்பர் மாதம் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாக்குச்சீட்டு விநியோகப் பணிகள் எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-6)

## 39...

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்ததாவது:-

"வேட்பு மனுத்தாக்கல் நிறைவடைந்துள்ளது. 39 வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். அவர்கள் அனைவரும் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளனர். 40 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்த நிலையில், சுயேச்சை வேட்பாளர் ஒருவர் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்யப்பட்ட 39 வேட்பு மனுக்களில் 3 வேட்பு மனுக்கள் மீது ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன. அவை மூன்றும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நீதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு வேட்பாளர்கள் ஒத்துழைக்கவேண்டும். சமூக வலைத்தளங்கள் ஊடாகத் தவறான மற்றும் வெறுப்பூட்டும் சித்திரிப்புகளுடனான பிரசாரங்களை மேற்கொள்வதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் விசேட சலுகைகள் வழங்கும் ஊடகங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும். வேட்பாளர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தேர்தல் பரப்புரைகளுக்கு பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் ஆகியவற்றை பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்" - என்றார். (அ-ம)

## மயக்கமருந்து...

சின் உயர்மட்டத்தில் இருந்து கடும் நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக மருத்துவமனைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வசித்துவரும் பெரும் எண்ணிக்கையான மக்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்துவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடமையில் இருக்கும் மயக்கமருந்து நிபுணரை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு இடமாற்றுமாறு பருத்தித்துறை மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகருக்கு வடமாகாண சுகாதார அமைச்சின் தரப்பில் இருந்து கடும் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.

வழக்கமான இடம்மாற்ற ஒழுங்குமுறையின் அடிப்படையில் பருத்தித்துறை - தெல்லிப்பழை யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு மருத்துவமனைகளுக்கு மருத்துவர்கள் இடம்மாற்றம் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறாயின் முல்லைத்தீவு மருத்துவமனையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருந்தே மயக்க மருந்து நிபுணர் ஒருவரை இடமாற்றத்தினூடாக அனுப்பி வைக்கவேண்டும். தற்போது எட்டு மயக்கமருந்து நிபுணர்களை தக்கவைத்திருக்கும் யாழ். போதனா நிர்வாகம் ஒருவரை விடுவிக்காது தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் இருப்பவரை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கே பருத்தித்துறை மருத்துவமனையில் இருப்பவரை இடம்மாற்ற உயர்மட்டத்தின் ஊடாக நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டுவருவதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடமையில் உள்ள மயக்க மருந்து நிபுணரை இடமாற்றம் செய்தால் அதற்கு பிரதியீடான மயக்க மருந்து நிபுணர் சுமார் ஒன்றரை மாதத்துக்குப் பின்னரே நியமிக்கப்படும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது. அதனால், எட்டு மயக்க மருந்து நிபுணர்களைதக்கவைத்திருக்கும் யாழ். போதனா மருத்துவமனை, ஒருவரை முல்லைத்தீவு மருத்துவமனைக்கு விடுவிக்கும் பட்சத்தில் எவ்வித மருத்துவ நெருக்கடிகளும் இன்றி குறித்த பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதத்தில் மட்டும் மயக்கமருந்து நிபுணரின் பங்கேற்புடன் ஏகப்பட்ட சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்ட நிலையில், இருக்கும் ஒருவரையும் இடமாற்றுவது பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சத்திரசிகிச்சை சேவைகள் முடங்கும் நிலையை ஏற்படுத்தும் என்று அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் நேற்றையதினம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருடன் மேற்கொள்ளப்பட்ட இரண்டு கட்ட பேச்சுகள் இணக்கமின்றி முடிவடைந்துள்ளதாகவும் நோயாளர்களின் நலன்களை கருத்தில் கொள்ளாது தொடர்ந்தும் நெருக்கடிகள் ஏற்படுத்தப்படுமாயின் நீதிகோரி போராட்டம் நடத்தியேனும் மயக்கமருந்து நிபுணரை தக்கவைக்க பருத்தித்துறை ஆதார மருத்துவமனைத் தரப்பினர் உறுதியாக இருப்பதாகவும் மேலும் தெரியவருகின்றது. (அ-ம-100)

## சுயநிர்ணய...

மீண்டும் இந்தக் கருத்தை மாற்றமின்றி வலியுறுத்துகிறோம் என்று ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜெயசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தேர்தல்களின்போது சிறுபான்மை இனத்தவர்களிமிருந்து வாக்குகளைப் பெறுவதற்கான கருவியாக 13ஆவது திருத்தம் பயன்படுத்தப்படுகின்றது. தமது மனவிருப்பத்துக்கு ஏற்ப அரசியல்வாதிகள் அவ்வப்போது தங்கள் நிலைப்பாட்டை மாற்றிவருகின்றனர். எனினும் ஐக்கிய சோசலிசக் கட்சியைச் சேர்ந்த நாங்கள் நிலையான உறுதியான கொள்கையைக் கொண்டுள்ளோம். வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் சமூகத்தினருக்கு சுயநிர்ணய உரிமையுள்ளது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

எங்களின் இந்த நிலைப்பாட்டுக்கு நாட்டின் சில பகுதிகளில் ஆதரவில்லாமல் இருக்கலாம். ஆனால் இது நியாயமானது - நீதியானது என நாங்கள் கருதுகின்றோம். தற்போதைய 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து வடக்கு - கிழக்கு மக்கள் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர் என நாங்கள் கருதவில்லை. அவர்களின் கரிசனைகளுக்கு தீர்வைக் காணும் நீண்டகாலத் தீர்வே அவர்களுக்கு அவசியம்.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்குவது நாட்டைப் பிளவுபடுத்தும் என நாங்கள் கருதவில்லை. மாறாக அது மேலும் ஐக்கியப்பட்ட நாட்டை உருவாக்கும் என நாங்கள் நம்புகின்றோம். ஸ்கொட்லாந்து போன்ற நாடுகளில் இதுவே வரலாறு.

இந்த விடயத்தில் ஏனைய கட்சிகளைப் போல ஐக்கிய சோஷலிஸக் கட்சி தடுமாறவில்லை. உதாரணத்துக்கு ஜே.வி.பி. ஒரு காலத்தில் 13ஆவது திருத்தத்தை கடுமையாக எதிர்த்தது. அதற்கு எதிராக வன்முறைகளைக் கூட பயன்படுத்தியது. ஆனால் அவர்கள் தற்போது தங்கள் நிலைப்பாட்டை மாற்றிவிட்டனர். தாங்கள் முன்னர் எதிர்த்த கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தற்போது தெரிவிக்கின்றனர். இந்த நிலையற்ற தன்மை அரசியல்கட்சிகளின் இரட்டை வேடத்தை வெளிப்படுத்துகின்றது" - என்றார். (அ-ம)

## ஒற்றையாட்சியை...

யிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது பக்கம் இருந்து பிரிந்து சென்றவர்களை விமர்சிப்பதில் அர்த்தமில்லை, மேல் மட்டத்தில் கட்சித் தாவல் இடம்பெற்றிருந்தாலும் மக்கள் எம்முடன்தான் இருக்கின்றனர் எனவே, மக்கள் எம்மை வெற்றிபெற வைப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இளைஞர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்படும், வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும், வெளிநாட்டு முதலீடுகள் கொண்டுவரப்படும்" - என்றார். (அ-ம-44)

## டம்மி...

கள் களமிறக்கப்படுகின்றனர். அதனால், ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் உயர்த்தப்பட வேண்டும். 10 மில்லியன் ரூபாவாகக் கட்டுப்பணத்தை நிர்ணயிக்கும்போது போலியான வேட்பாளர்களின் வருகையைத் தடுக்க முடியும் என்றும் கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

## நாடாளுமன்று...

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். (அ-ம-44)

## கோப்பிக்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த காலங்களில் தேர்தல் ஆணைக்குழு நீதிமன்றம் போல அமைதியாகவும், ஒழுக்கமாகவும் காணப்படும். இம்முறை அது 'கோப்பிக்கடை' போல காணப்படுகின்றது. நாட்டின் முதல் பிரஜையாக விரும்புபவர்களின் நடத்தைகள் கவலையளிக்கும் விதத்தில் காணப்படுகின்றன. ஒரு வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்காக பல 'டம்மி' வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் காடையர்கள் போல நடந்துகொண்டனர். வேட்பாளர்கள் மத்தியில் ஒழுக்கத்தைப் பேணுவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு முயலவேண்டும்" - என்றார். (அ-ம)

## மன்னார்...

மன்னார் மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால், கடந்த ஆறாம் திகதி கொடியேற்றத்துடன் ஆவணிப் பெருவிழாக் கொண்டாட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. நவநாள் ஆராதனைகளைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நற்கருணைப் பெருவிழா இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து நேற்று திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் நிறைவில் மடுமாதாவின் தேர்ப் பவனியும் இடம்பெற்றது. தேர்ப் பவனியைத் தொடர்ந்து திருச்சொரூப ஆசீர்வாதத்துடன் திருவிழா நிறைவடைந்தது. (அ-ம-60-56)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 குளங்கள் புனரமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பிப்பு

## ஒன்றரைக் கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஓக. 16

மல்வத்து ஓயாவுடன் தொடர்புடைய 100 குளங்களைப் புனரமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் மல்வத்து ஓயாவுக்குட்பட்ட 100 குளங்கள் இதன் கீழ் மீள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அதன்படி, அநுராதபுரத்தில் 37 குளங்களும், வவுனியாவில் 32 குளங்களும், மன்னாரில் 31 குளங்களும் தெரிவு செய்யப்பட்டு பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன

இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு குளத்தை புனரமைப்பதற்காக ஒருகோடியே ஐம்பத்தைந்து இலட்சம் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்துக்கு 573 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு தலா 496 மில்லியன் ரூபாவும் புனரமைப்பதற்காக செலவிடப்படவுள்ளன. (ச-இ)

# இஸ்ரேலைப் பாதுகாப்பதற்கு மேற்கு நாடுகள் பிரயத்தனம்

## ஈரானுக்கு எச்சரிக்கை

**நியூயோர்க், ஓக.16**

**இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படும் என்ற அச்சுறுத்தலை நிறுத்த வேண்டும் என்று ஈரானிடம் அமெரிக்காவும் ஐரோப்பிய நட்பு நாடுகளும் வலியுறுத்தியுள்ளன. இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தினால் மத்திய கிழக்கில் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய போருக்கு அது இட்டுச் செல்லக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்கா தனது நட்பு நாடுகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் விமானம் தாங்கி போர்க்கப்பலையும் நீர்மூழ்கியில் இருந்து விண்ணுக்குச் செலுத்தப்படும் ஏவுகணைகளையும் ஒன்று திரட்டி வருவதால் மத்திய கிழக்கு வட்டாரத்தைப் பதற்றம் தொற்றிக்கொண்டுள்ளது.


யு.எஸ்.எஸ். ஜார்ஜியா எனும் ஏவுகணை பாய்ச்சக்கூடிய நீர்மூழ்கிக் கப்பலை மத்திய கிழக்குக்குக் கொண்டுசெல்ல அமெரிக்க தற்காப்பு அமைச்சர் லாயிட் ஆஸ்டின் உத்தரவிட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பலஸ்தீனப் போராளிக் குழுவான ஹமாஸின் அரசியல் தலைவரை தெஹ்ரானிலும் ஹிஸ்புல்லா குழுவின் மூத்த தளபதி ஒருவரை பெய்ரூட்டிலும் இஸ்ரேல் அண்மையில் படுகொலை செய்திருந்தது.

அதற்குப் பழி தீர்க்கும் வகையில் இஸ்ரேல் மீது பதில் தாக்குதல் நடத்த ஈரானும் லெபனான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா குழுவும் திட்டமிட்டுள்ளன.

இந்த நிலையில் ஈரானின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தும் அனைத்துலக முயற்சிகள் தீவிரமடைந்து உள்ளன. அதன் ஒரு பகுதியாக, தெஹ்ரானை எச்சரிக்கும் வகையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, பிரிட்டன் ஆகியவற்றின் தலைவர்களும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். இஸ்ரேலுக்கு எதிராக ராணுவத் தாக்குதல் நடத்தப்படும் என்ற அச்சுறுத்தலைக் கைவிடவேண்டும் என்று ஈரானைக் கேட்டுக் கொள்கிறோம்.

தாக்குதல் நடத்தப்படுமானால் மத்திய கிழக்கு வட்டாரத்தில் ஏற்படக்கூடிய கடுமையான விளைவுகள் பற்றி நாங்கள் கலந்து ஆலோசித்தோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், 'உதித்தனன் உலகம் உய்ய' என்ற ஆன்மீக தலைப்பில் அருளுரையை செஞ்சொல் வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நிகழ்த்தினார். (ச-25)

# அதிகரிக்கிறது கசிப்பு நுகர்வு

கொழும்பு, ஓக.16

வரி உயர்வைத் தொடர்ந்து சட்டவிரோத மதுபானம் நுகர்வு, குறிப்பாக 'கசிப்பு' நுகர்வு 19 வீதத்திலிருந்து 30வீதமாக கணிசமானளவு அதிகரித்துள்ளது என்று கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

வரி அதிகரிப்பைத் தொடர்ந்து, சட்டவிரோத மதுபானங்கள் சந்தைக்கு வந்தமையுடன், மதுபானத்தின் விலையும் வேகமாக அதிகரித்துள்ளது.

அரசின் வருவாய் ஈட்டும் மூன்றாவது பிரதான துறையாக விளங்கும் இந்தத் துறையானது 2024 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின்படி, இந்த ஆண்டு 232 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டுவதை நோக்காகக் கொண்டுள்ளது.

அரசாங்கத்தினால் மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்யும் நபர்கள் தொடர்ந்து இந்தப் பகுதிகளில் கட்டுப்பாடுகளின்றிச் செயற்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)



பச்சிலைப்பள்ளி பிரதேச சிறுதொழில் முயற்சியில் ஈடுபடும் 27 பெண்களுக்கு சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் ஐசிங்கேக் தொடர்பான பயிற்சி நெறி பிரதேச செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் வளவாளராக கொக்குவில் இந்துக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர் இராமநாதன் றங்கதுளசி கலந்து கொண்டார். (ச-45-9)

**பணிப்பெண் தேவை**

நன்றாக உணவு சமைப்பதிலும், வீட்டை சுத்தம் செய்வதிலும் நல்ல அனுபவமுள்ள வீட்டுப் பணிப்பெண் யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டில் தங்கி வேலை செய்ய தேவை

தொடர்பு: 076 287 8157

**காணி விற்பனைக்கு**

இரா௪ வீதி கோப்பாயில் ரான்ஸ்போமர் (Transformer) இற்கு முன்பாக 4 சந்திக்கு வடக்கில் 6 பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

தொடர்பு:- 077 651 4776

(CS/55935) J-1

**வீடு வாடகைக்குண்டு**

மல்லாகத்தில் 5 அறையுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு

தொடர்புகளுக்கு: 076 412 8104

**குறைந்த விலையில் இயந்திரங்கள் விற்பனைக்கு**

யாழில் உள்ள சமுத்திரா ரேடர்ஸ் நிறுவனத்தில் இடியப்பம் பழியும், வெண்ணெய் நீக்கும், மா அரைக்கும், தும்பு மிட்டாஸ், சோளம் பொரி தயாரிக்கும் இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 494 9683

**வேலை வாய்ப்பு**

யாழ் நகரில் அமைந்துள்ள சமுத்திரா ரேடர்ஸ் (Hardware) நிறுவனத்திற்கான வேலை வாய்ப்பு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 077 077 6469, 077 494 9683



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.